[1995 நவம்பர் 9

69—

மரம் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்

* ***36991*—திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், கல்வராயன் மலைப் பகுதியில் மரம் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் கல்வராயன் மலைப் பகுதியில் மரம் வளர்ப்போர் கூட்டுறவுத் சங்கங்கள் ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எனவே அடுத்த வினாவிற்கு இடம் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்போர் நலனை முன்னிட்டு, மரம் வளர்க்க ஊக்குவிப்பதற்கும், மலைவாழ் மக்களின் நலனைக் கருதியும், மறுபரிசீலனை செய்து, மரம் வளர்ப்போருக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேசிய பால் வளர்ச்சி வாரியமும் தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் இணைந்து மரம் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கி, அதிலே கையொப்பம் இட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தின்படி நிதியும் வரும் என்று சொன்னால், வருகின்றபோது பரிசீலிக்கப்படும்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டிலாவது மேற்படி திட்டத்தைத் துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் துவங்கக் கூடிய காலத்தில், இது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *70,* திரு. வ.மு. சுப்பிரமணியம், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

70—

வரி ஏய்ப்பைத் தடுக்க நடவடிக்கை

** 35162- திரு. வ.மு. சுப்பிரமணியம்:*

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிமாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வியாபாரம் செய்வதாக தவறான கணக்கு காட்டி (Consignment Sales) வரி ஏய்ப்பு என்னென்ன உற்பத்தி பொருட்களில் நடைபெறுகின்றது?

(ஆ) அதனைத் தடுக்க மாநில அரசு எடுத்துக் கொண்ட முயற்சி பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வியாபாரம் செய்வதாக (Consignment Sales) என்ற வகையில் வரி ஏய்ப்பு செய்யப்படும் பொருட்கள் கீழ்க்கண்டவைகள் ஆகும்:—

1. கனிமப்பொருள்
2. இரும்பு கலாய்குழாய்கள்
3. எலக்ட்ரானிக் பொருள்கள்
4. மருந்துகள்
5. பூச்சி மருந்துகள்
6. இரும்பு மற்றும் ஸ்டீல்
7. பிவிசி பைப்ஸ்